# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2018–2019

# வணிகவரித் துறை

## முன்னுரை

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருவதன் மூலம், மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்கு வணிகவரித் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. அரசின் வருவாயை வசூலிப்பதில் திறமையான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டும், அதே சமயத்தில் இத்துறை, வணிக வர்த்தகங்களை ஒழுங்குப்படுத்தி, வரி வசூலிப்பது மட்டுமல்லாமல் வணிகர்களின் நலனிலும் அக்கறை கொண்டு நட்புடன் செயல்பட்டு வருகிறது.

## 2. வருவாய் வசூலின் போக்கு

துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் கடந்த ஆறாண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு :–

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | வரி வருவாய் |
|---|---|
| 2012–2013 | 47,884.25 |
| 2013–2014 | 56,851.87 |
| 2014–2015 | 60,314.61 |
| 2015–2016 | 61,709.58 |
| 2016–2017 | 67,576.77 |
| 2017–2018 | 73,148.28 |

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் **01.07.2017** முதல் நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வந்தது.

வணிகவரித் துறையில் **2017–2018–**ஆம் நிதியாண்டில் ரூ.**73,148.28** கோடி (இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெறப்படும் இழப்பு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முன்பணம் உள்ளடக்கியதாகும்) வசூல் செய்யப்பட்டு, சென்றாண்டு இதே காலத்தில் வசூல் செய்யப்பட்ட ரூ.**66,189.37** கோடியினை விட (வரி திருப்புகை நீங்கலாக) ரூ.**6,958.91** கோடி கூடுதலாக வசூல் செய்யப்பட்டு, முந்தைய ஆண்டைவிட **10.51%** வளர்ச்சி விகிதம் அடைந்துள்ளது. இந்த சாதனை நிலையற்ற பொருளாதார சூழ்நிலையிலும் சாத்தியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. கடந்த ஆறாண்டுகளில் சட்டங்கள் வாரியான வரி வருவாய்

கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள் வாரியான வரி வருவாய் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

| | சட்டம் | 2012–2013 | 2013–2014 | 2014–2015 | 2015–2016 | 2016–2017 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (TNVAT Act) | 42,037.87 | 51,244.97 | 53,930.47 | 54,804.54 | 59,262.00 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் (CST Act) | 2,903.84 | 3,116.07 | 3,811.17 | 4,037.76 | 5,125.20 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (TNGST Act) | 260.52 | 218.39 | 195.21 | 211.12 | 188.65 |
| 4 | தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் (TNET Act) | 70.44 | 68.17 | 82.97 | 106.29 | 85.81 |
| 5 | பந்தய வரிச் சட்டம் (Betting Tax Act) | 5.58 | 5.20 | 5.60 | 5.65 | 7.86 |
| 6 | ஆடம்பரங்கள் வரிச் சட்டம் (Luxury Tax Act) | 290.14 | 299.51 | 319.26 | 357.03 | 379.01 |
| 7 | நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் சரக்குகள்) [Entry Tax Act (Vehicles and Goods)] | 2,315.86 | 1,899.56 | 1,969.93 | 2,187.19 | 2,258.24 |
| | மொத்தம் | 47,884.25 | 56,851.87 | 60,314.61 | 61,709.58 | 67,576.77 |

2017–2018–ஆம் ஆண்டுக்கான வரி வசூல் விவரம்

| | மொத்தம் **Total** | மதிப்புக் கூட்டு வரி அல்லாதவை **Non VAT** | மதிப்புக் கூட்டுவரி / மற்றவை **VAT / Others** | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **SGST** | ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **IGST settlement** | முன்கூட்டியே அளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **Advance IGST settlement** | இழப்பீடு **Compen-sation** |
|---|---|---|---|---|---|---|---|
| **ஜூலைக்கு முன்பாக** | 15,535.66 | 7,592.28 | 7,943.38 | 0 | 0 | 0 | 0 |
| ஜூலை முதல் | 57,612.62 | 28,554.90 | 3,518.80 | 16,199.93 | 7,402.99 | 1,304.00 | 632.00 |
| மொத்தம் | **73,148.28** | **36,147.18** | **11,462.18** | **16,199.93** | **7,402.99** | **1,304.00** | **632.00** |

## 4. நிர்வாக அமைப்பு

துறையினால் நிர்வகிக்கப்படும் பல்வேறு வணிகவரிச் சட்டங்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை, திறமையான நன்கு கட்டமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பின் உதவியுடன் வணிகவரித் துறை செயல்படுத்தி வருகிறது. சென்னை தலைமையிடத்தில் நிர்வாகத் தலைவராகச் செயல்படும் வணிகவரி ஆணையருக்கு உதவியாக, ஆறு கூடுதல் ஆணையர்கள், ஒரு கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) மற்றும் பிற அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

**இத்துறை கீழ்கண்டவாறு நான்கு பிரிவுகளை உள்ளடக்கியது:**

## 4.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் உள்ள **334** வரிவிதிப்பு வட்டங்களில், உதவி ஆணையர்கள்/ வணிகவரி அலுவலர்கள் தலைமையில், துறையின் முக்கியப் பணிகளான பதிவுச் சான்று வழங்குதல், வரி விதிப்பு, வரி வசூலித்தல், நமூனாக்கள் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்கள், முதற்கட்டமாக மாவட்ட / மண்டல அளவில் **40** துணை ஆணையர்களாலும், அடுத்த கட்டமாக கோட்ட அளவில் **10** இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன.

இத்துறையில் வசூலிக்கப்படும் மொத்த வரி வருவாயில் ஏறக்குறைய **60** விழுக்காடு வருவாயினை பங்களிக்கும் பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவுகள் (Large Tax Payers Units) சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இணை ஆணையர் தலைமையின் கீழ், துணை ஆணையர்கள் உதவியுடன் செயல்படுகின்றன.

## 4.2 தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். சரியான வரிச்செலுத்துதலை கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், வரித் திருப்புகை மற்றும் வரி ஏய்ப்பு தொடர்பான ஆவணங்களைச் சரிபார்த்து அரசின் நிதி கசிந்தோடாமல் கண்காணித்தல் ஆகியவை தணிக்கையின் முக்கிய செயல்பாடுகளாகும்.

வணிகவரி கோட்டத்தின் கீழ் இயங்கும் ஒவ்வொரு சரகமும், ஒரு வணிகவரி அலுவலரை உதவியாகக் கொண்டு ஓர் உதவி ஆணையர் தலைமையில், உள்ளீட்டுத் தணிக்கைக் குழுவை கொண்டுள்ளது. இந்த உள்ளீட்டுத் தணிக்கைக் குழுக்கள், தொடர்புடைய மாவட்ட/மண்டல துணை ஆணையர்களால் வகுக்கப்படும் அட்டவணையின் அடிப்படையில், ஒழுங்கு முறைப்படி, வரிவிதிப்பு வட்டங்களில் தொடர் தணிக்கை மேற்கொள்கின்றன.

### 4.2.1 மாநிலக் கணக்காயரின் தணிக்கை

வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் குறிப்பிட்ட கால அளவில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், துறையின் அவ்வப்போதான செயல்திறன் தணிக்கை தவிர பல்வேறு கருப்பொருள் சார்ந்த ஆய்வும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள், துறையின் தணிக்கை குழுவின் கூட்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன.

## 4.3 மேல்முறையீட்டுப் பிரிவு

### 4.3.1 மேல்முறையீடு

உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையரிடமும், துணை ஆணையரின் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு இணை ஆணையரிடமும் உள்ளது. மாநிலத்தில் **20** மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும்,

தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கீழ் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் சார்பாக வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

### 4.3.2 தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் அல்லது இணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி அல்லது வருமான வரித்துறை அல்லது மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை

அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராக நியமிக்கப்படுவார். கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுவார்.

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் இயங்கி வருகின்றன. வழக்குகளில் இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் துறை சார்பில் வாதிடுவர்.

## 4.4 செயலாக்கப் பிரிவு

### 4.4.1 செயலாக்கப் பிரிவு கோட்டங்கள்

இப்பிரிவு, மாநிலம் முழுவதும் எட்டு செயலாக்கக் கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு ஒன்றையும் கொண்டுள்ளது. அனைத்து செயலாக்கக் கோட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு ஆகியவை இணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. சில அளவுருக்கள் (parameters) அடிப்படையில், புலனாய்வு செய்தல், சரக்குகளின் நடமாட்டத்தை கண்காணித்தல், திடீர் சோதனைகள் நடத்துவது மற்றும் வரிவிதிப்புக்குரியவர்களது, வணிக இடங்களில் தல தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து அதனை கட்டுப்படுத்துதலே செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும்.

இத்தகைய தணிக்கை மற்றும் திடீர் ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்படும் கருத்துருக்கள், சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அதனை

நடைமுறைப்படுத்தி வரிவிதிப்பு மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகின்றன.

### 4.4.2 மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு

ஓர் இணை ஆணையர் தலைமையிலான, மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, வரி ஏய்ப்புக்கு வழிவகுக்கும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை தொடர்பான தகவலைப் பெற்று தேவையான சரிபார்க்கும் பணியைச் செய்கிறது.

அவ்வாறு தகவல்களை சரிபார்ப்பதன் விளைவாக தேவைப்படும் இனங்களில் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, அவற்றைச் செயல்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்றன. சில இனங்களில், புலனாய்வுக் கோப்புகள் உருவாக்கப்பட்டு மேல் நடவடிக்கையின் பொருட்டு சம்பந்தப்பட்ட செயலாக்கப் பிரிவு இணை ஆணையருக்கு அனுப்பப்படுகின்றன.

### 4.4.3 மாநில வர்த்தக நுண்ணறிவுப் பிரிவு

வணிக வரி ஆணையர் அலுவலகத்தில், வணிக வரி ஆணையர் அவர்களின் நேரடி மேற்பார்வை மற்றும்

கட்டுப்பாட்டில் வர்த்தக நுண்ணறிவுப் பிரிவு (Business Intelligence Unit) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஓர் இணை ஆணையர் தலைமையின் கீழ் நான்கு உதவி ஆணையர்கள், ஓர் உதவி கணினி நிரலர் (Assistant Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மாநில வர்த்தக நுண்ணறிவுப் பிரிவில், பல்வேறு வெளி நிறுவனங்களிலிருந்து / அமைப்புகளிடமிருந்து பெறப்படும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து, பெரும் வரி ஏய்ப்பினைக் கண்டறிவதற்கு தகவல் தொழில் நுட்பம் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் தகவல்களை, தரவு பகுப்பாய்வு மேற்கொண்டு இதன் மூலம் பயனுள்ள அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, துறையின் நிர்வாகப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவிற்கு வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்படுகின்றன. சில இனங்களில் புலனாய்வுக் கோப்புகள் உருவாக்கப்பட்டு, தணிக்கை / திடீர் ஆய்வுகள் வணிக இடத்தில் மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட செயலாக்கப் பிரிவு இணை ஆணையருக்கு அனுப்பப்படுகின்றன.

### 4.4.4 கோட்ட வர்த்தக நுண்ணறிவுப் பிரிவு

கோட்ட அளவிலான வர்த்தக நுண்ணறிவுப் பிரிவு ஒவ்வொரு செயலாக்கக் கோட்டத்திலும் இணை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள், தங்களின் கோட்டத்திற்குட்பட்ட வரம்பிற்குள் கிடைத்த ஆதாரங்கள் மற்றும் உள்ளூர் அதிகார அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் புலனாய்வு மேற்கொள்கின்றனர்.

## 5. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

மாநில தலைமையிடத்தில் புள்ளியியல் துறையின் இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. ஒவ்வொரு வணிகவரிக் கோட்டம்/ மாவட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையருக்கு உதவியாக ஒவ்வொரு சரக / வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும், புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட அறிக்கைகள்/ வெளியீடுகளை வெளியிடுகிறது:

1. நிர்வாகக் கோட்டங்கள் அளவிலான மாதாந்திர செயல்திறன் அறிக்கை;
2. செயலாக்கக் கோட்டங்கள் அளவிலான மாதாந்திர செயல்திறன் அறிக்கை;
3. அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை;
4. எதிர்மறை வருவாய் ஈட்டும் பொருட்களின் பட்டியல் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை;
5. பெரு வணிகர்களின் வருவாய் பற்றிய விவரங்களைப் பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை;
6. எதிர்மறை வருவாய் ஈட்டும் வணிகர்களின் பட்டியல் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை;
7. சட்ட வாரியாக, மாத வாரியாக மற்றும் கோட்ட வாரியாக வருவாயைத் தொகுத்தல்;
8. வணிகவரித் துறை – வருடாந்திர “நிர்வாக அறிக்கை” ;
9. வணிகவரித் துறை –“முக்கிய குறியீடுகள்” மீதான வருடாந்திர அறிக்கை ;
10. “வணிகவரித் துறை – புள்ளி விவரத் தொகுப்பு – வருடாந்திர காலமுறை அறிக்கை.

வணிகவரித் துறை அலுவலகங்களின் மறுசீரமைப்பிற்குப் பின்னர் இவ்வாராய்ச்சி பிரிவின் தேவை குறித்து மறுபரிசீலனை செய்யப்படும்.

## 6. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், **1982–**ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டு, வணிகவரித் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் தலைமை பயிற்சி நிலையமாக செயல்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில், நேரடி நியமன அதிகாரிகளுக்கு பணியிடைப் பயிற்சியும், பிற பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகின்றன. மேலும், வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், பிராந்திய அளவில் அந்தந்த கோட்ட இணை ஆணையர்கள் தலைமையில், கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, வணிகவரித் துறையின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ்

பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான கணினி பயிற்சிகள், இச்சட்டம் தொடர்பான சமீபத்திய திருத்தங்கள், அறிவிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவையும் பயிற்சியாளர்களுக்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்பயிற்சியில் மின்னணு வழி பட்டி (e-way bill) தொடர்பான பயிற்சியும், இணை ஆணையர் முதல் இளநிலை உதவியாளர் வரை அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**2015–2016**–ஆம் ஆண்டு முதல் வழக்கமாக நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுடன் கீழ்க்காணும் சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன:–

- துணை மற்றும் இணை ஆணையர்கள் ஆகியோருக்கு இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மேலாண்மைப் பயிற்சி வழங்குதல்.
- நேரடி நியமன உதவி ஆணையர்களுக்கு மென் திறன்வளர் பயிற்சி, பணியிடைப் பயிற்சியின் ஒரு பகுதியாக அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில் 3 நாட்களுக்கு வழங்குதல்.

வழக்கமான புத்தாக்கப் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சியின் போது சிறப்பு பயிற்சி வகுப்புகளாக, யோகா, ஆளுமை திறன் மேம்பாடு மற்றும் நேர மேலாண்மை போன்றவைகள் அலுவலர்களின் தலைமைப் பண்பை மேம்படுத்தவும், சிறந்த நேர நிர்வாகத்திற்காகவும் வழங்கப்படுகின்றன.

ஊழியர்கள் மற்றும் துறை அதிகாரிகளிடம் இருக்கும் திறமைகளை மேம்படுத்த மற்றும் புதியவைகளைக் கற்க பயிற்சி அளிப்பதின் மூலம் இப்பயிற்சி நிலையம், தரமான பொது சேவை வழங்க உறுதி மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் பயிற்சியுடன், மேலாண்மை பயிற்சி, மென்திறன் பயிற்சி, தலைமை திறமைகளை மேம்படுத்துதல், கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை தூண்டுதல், வெளிப்படையான, கண்ணியமான மற்றும் சிறந்த வரி நிர்வாகம் போன்ற ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சிகளை துறையின் அனைத்து பணியாளர்களுக்கும் வழங்குவதன் மூலம் இந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிறது.

பயிற்சி நிலையத்தின் நோக்கம் பயிற்சியாளர்களின் மத்தியில் தொடர்ச்சியான கற்றல், குழு வேலை, தரமான பொது

சேவை, ஒழுக்க நடத்தை, நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பிக்கை போன்ற நன்மதிப்புகளை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

## 7. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் 30.06.2017 வரையில் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன:–

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண்.54–இல் உள்ளடக்கப்பட்ட 6 சரக்குகள் தவிர)
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச்சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

மேலும், கீழ்க்காணும் சட்டங்கள் 01.07.2017 முதல் வணிகவரித் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன:-

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 (அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண்.54–இல் உள்ளடக்கப்பட்ட 6 சரக்குகள் மட்டும்)
2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017.

## 8. நிர்வாகச் செலவினம்

குறைந்த செலவில் மேம்பட்ட வருவாயினை அடைவதில் வணிகவரித் துறையின் நிர்வாகத் திறமை ஆண்டுக்காண்டு மேம்பட்டு வருகிறது. நிர்வாக செலவினமானது, மொத்த வணிகவரி வருவாயில் ஒரு விழுக்காட்டைக்கூட எந்த ஒரு வருடத்திலும் கடந்ததில்லை.

## 9. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST)

### 9.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST), தமிழ்நாடு உள்பட நாடு முழுவதும் 2017, ஜூலை 1 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மறைமுக வரி துறையில் ஒரு குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். பல்வேறு மத்திய மற்றும் மாநில மறைமுக வரிகளை ஒருங்கிணைத்தும், அடித்தள விளைவுகளைத் தடுக்கும் பொருட்டும், ஒருங்கிணைந்த ஒரு

தேசிய சந்தையை உருவாக்கும் பொருட்டும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்ற ஒற்றை வரி கொண்டு வரப்பட்டுள்ளது. வரி சீரமைப்பின் காரணமாக விலை குறைவு, தடைகள் எதுவும் இன்றி உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீரான சரக்கு போக்குவரத்து ஆகியவை நுகர்வோருக்கான மிகப் பெரிய நன்மைகளாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் இந்தியத் தயாரிப்புகளை போட்டியிடச் செய்வதும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் முக்கிய நோக்கமாகும். சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டதால், நாடு முழுவதும் தங்கு தடையின்றி சரக்குகள் எடுத்துச் செல்ல ஏதுவாக உள்ளது. நிர்வாக நோக்கில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது, ஒரு வெளிப்படையான மற்றும் சுய கண்காணிப்பு வரி முறையாகும்.

## 9.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம், கூலி வேலைப் பணிகள் (Job works) மற்றும் இடைநிலை ஏற்பாடுகளில் (Transitional Provisions) உள்ள பல்வேறு சிக்கல்கள், வரிவிகிதங்களைச்

சீரமைத்தல், பொதுவான இணைய தளத்தில் நமூனாக்கள் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நீட்டித்தல், தாமதத்திற்காக செலுத்தவேண்டிய தொகையை தள்ளுபடி செய்தல், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதள தொழில்நுட்பக் குறைபாடுகளை நீக்குதல், வருவாய் ஆதாரத்தில் வரி பிடித்தம் செய்வது/வசூலிப்பது (TDS & TCS) மற்றும் எதிரிடை கட்டண அடிப்படை (Reverse Charge Mechanism) ஆகியவைகளின் துவக்க தேதியினை தள்ளி வைத்தல் போன்ற பல்வேறு சிக்கல்களை தீர்த்து வைத்துள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற பரிந்துரையின்படி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் அறிவிக்கைகள், சுற்றறிக்கைகள் மற்றும் தெளிவுரைகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. மேலும் விதிகளில் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறு வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தில் இணக்க வரி செலுத்துவோருக்கான உச்சவரம்பு ரூ.75 இலட்சத்தில் இருந்து ஒரு கோடியாக உயர்த்தி திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. எளிய முறையில்

நமூனா தாக்கல் செய்வது உட்பட, சம்பந்தபட்டவர்களின் கோரிக்கைகளை ஆராய, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் மாநில அமைச்சர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அனைத்து மறு சீரமைப்பு நடவடிக்கைகள், **"ஒரு தேசம் ஒரு வரி"** என்கிற புதிய வரிவிதிப்பு முறையை சீராக்க பெரிதும் உதவியுள்ளன.

### 9.3 மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக் குழு, முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (Screening Committee on Anti–Profiteering, Authority for Advance Ruling and Appellate Authority for Advance Ruling)

சரக்குகள் மற்றும் சேவைகள் மீது குறைவான வரி விகிதம் நிர்ணயிக்கும் பொழுது, அதன் தொடர்ச்சியாக சரக்குகள் மற்றும் சேவைகளின் விலை குறைப்பு நுகர்வோருக்கு சென்று அடைவதை ஆய்வின்படி உறுதி செய்ய தமிழ்நாட்டில் மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக் குழு (Screening Committee on Anti-Profiteering) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வரி செலுத்துவோரின் வரி விதிப்பு குறித்து பிணைப்பு தெளிவுரை அளிப்பது தொடர்பாக முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு (Tamil Nadu Authority for Advance Ruling)

மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (Appellate Authority for Advance Ruling) ஆகிய அமைப்புகள் செயல்படுகின்றன.

**9.4 வரி செலுத்துவோரைப் பகிர்ந்தளித்தல்**

முந்தைய மதிப்புக் கூட்டு வரியின் கீழ், வரி செலுத்துவோர் பல்வேறு மத்திய மற்றும் மாநில சட்டங்களின் நேர்வுக்கேற்ப மத்திய மற்றும் மாநில வரி அதிகாரிகள் ஆகிய இருவரையும் எதிர்கொள்ள நேரிட்டது. ஆனால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வணிகர்கள் ஒரு சட்டம் மற்றும் ஓர் அதிகாரியை எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கிடையேயான கூட்டு அதிகாரப் பகிர்வு (Cross Empowerment) காரணமாக வணிகர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் சுமைகள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில், மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கிடையேயான, வரி செலுத்தும் வணிகர்களைப் பகிர்ந்தளிக்கும் பணி தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.

**9.5 சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதம்**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ், சுமார்,

- **163** சரக்குகளுக்கும் மற்றும் **97** வகையான சேவைகளுக்கும் முழுவதுமாக விலக்களிக்கப்பட்டு உள்ளது.
- **263** சரக்குகள் மீது குறைந்த வரிவிகிதமான **5%** வரி விதிக்கப்பட்டுள்ளது.
- **256** சரக்குகள் மீது **12%** வரி விதிக்கப்பட்டுள்ளது
- **607** சரக்குகள் மீது **18%** வரி விதிக்கப்பட்டுள்ளது .
- **48** சரக்குகள் மீது அதிகபட்ச வரிவிகிதமான **28%** வரி விதிக்கப்பட்டுள்ளது .
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்படுவதால், மாநில அரசுக்கு ஏற்படும் வரிவருவாய் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு **28%** வரி விதிக்கப்படும் சில பொருட்கள் மீது மேல்வரி விதிக்கப்படுகிறது.
- இதுதவிர விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினத்தால் ஆன **18** பொருட்கள் மீது **3%** வரி விதிக்கப்பட்டுள்ளது.
- வைரம் மற்றும் விலை உயர்ந்த கற்கள் போன்ற **3** பொருட்களுக்கு **0.125%** வரி விதிக்கப்பட்டுள்ளது.

- ரூபாய் ஒரு கோடி வரையிலான வரிக்குட்பட்ட விற்று முதல் உள்ள பதிவுப்பெற்ற வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் இணக்க முறையில் 1% வரியின் கீழ் வரி செலுத்த வழிவகை உள்ளது.
- இறக்குமதி மற்றும் வெளி மாநிலங்களுக்கு வழங்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படுகிறது.

வரிவிதிப்பு தொடர்பாக தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு வணிக மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தை ஆண்டுதோறும் அரசு நடத்தி வருகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் மட்டுமே, மத்திய மற்றும் மாநில அரசுகள், சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்படும் வரி விகிதத்தில் ஏதேனும் மாறுதல்கள் மேற்கொள்ள இயலும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்களில் தமிழ்நாடு வணிக மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட 84 கோரிக்கைகள் மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அதில் பலவகையான சரக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பான

38 கோரிக்கைகள் சாதகமாக இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன. வணிக மற்றும் தொழில் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மீதமுள்ள 46 கோரிக்கைகள் மற்றும் வருங்காலங்களில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் யாவும் எதிர்வரும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்களில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 9.6 மின்னணு வழி பட்டி (e-way Bill)

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் மின்னணு வழி பட்டி முறையானது, இதற்கு முன்பு சரக்குகளை எடுத்து செல்ல மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் நடைமுறையில் இருந்த வழி பட்டிக்கு மாற்றாக உள்ளது. ரூ.50,000–க்கு மேல் உள்ள சரக்குகளை வெளிமாநிலத்திற்கு எடுத்து செல்லும் நேர்வுகளில், மின்னணு வழி பட்டி உருவாக்கம் தேவையாக உள்ளது. மதிப்புக் கூட்டு வரியில் சரக்குகளுடன் வழி பட்டி எடுத்து செல்வதற்கு எதிர்மறையாக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் மின்னணு வழிபட்டி உருவாக்கப்பட்டு, சரக்குகள் எடுத்து செல்வது உறுதி செய்யப்படுகின்றன. தற்பொழுது, நாடு முழுவதும் 2018, ஏப்ரல்

1 முதல் வெளி மாநிலங்களுக்கு சரக்குகள் அனுப்பும் நேர்வுகளிலும் 2.6.2018 முதல் மாநிலத்திற்குள் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் மதிப்புடைய சரக்குகளை எடுத்துச் செல்லும் நேர்வுகளிலும் மின்னணு வழி பட்டி அமல்படுத்தப்பட்டுள்ளது.

## 10. வணிகர் நலன்

### 10.1 வணிகர் நல வாரியம்

#### 10.1.1 செயல்பாடுகள்

வணிகர்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியத்தின் ரூ.5 கோடி தொகுப்பு நிதியானது ரூ.10 கோடியாக 25.01.2017 அன்று உயர்த்தப்பட்டது. நாளது தேதி வரை, 46,873 உறுப்பினர்கள் உள்ளனர்.

#### 10.1.2 உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம்

உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், 2006–ன் கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில், இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 10.1.3 நலத்திட்ட உதவிகள்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, தீ விபத்து உதவி, மற்றும் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் உரிய சான்றிதழ்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் ரூ.**119.77** இலட்சம் மதிப்பில் **544** நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. கணினிமயமாக்கல்

### 11.1 முழுமையான தீர்வுத் திட்டம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கும் பொருந்தும் வகையில் துறையின் முழுமையான தீர்வுக்கான திட்டம் ரூ.**230.95** கோடி மதிப்பில் அமல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் :–

- வணிகர்களுக்கான சேவையை மேம்படுத்த
  - அ) எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவைகளை அணுகு வதற்கான வசதி

ஆ) குறைந்த நேரத்தில் சேவைகள் வழங்குதல் மற்றும் துறையுடனான நேரடி தொடர்பு குறைக்கப்படுதல்

இ) அதிகமான வழிகளில் சேவைகள் வழங்குதல்

ஈ) சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை

- **கீழ்கண்ட முறையின் மூலம் துறையின் மேம்படுத்தப்பட்ட வரி வருவாய் ஈட்டுவதற்குண்டான குறிக்கோளை அடைதல்:-**

அ) அடிப்படை வரி செயல்முறையை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் அமைப்பு

ஆ) வரி வசூல் செய்யும் பிற துறைகளின் ஒத்துழைப்புடன் வரி வருவாயினை மேம்படுத்துதல்

இ) துறையின் நேரத்தை விரையம் செய்யும் மற்றும் மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை பெரிதும் குறைப்பதன் மூலம் துறை அலுவலர்களை அதிக வரி வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

ஈ) வணிக நுண்ணறிவு சார்ந்த முடிவுகளை மேற்கொள்வதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை உருவாக்கும் திறன்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால், இச்சட்டத்திற்கு உட்படாத **6** பொருட்களை கையாளும் பதிவு பெற்ற வணிகர்கள், துறையின் இணைய தளம் https://ctd.tn.gov.in வாயிலாக கீழ்க்கண்ட இணைய வழி சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்:-

1. மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல்
2. மின்னணு முறையில் வரி செலுத்துதல் (இணைய வழி மற்றும் வங்கிகள் மூலம்)
3. இணைய வழியில் ஜெஜெ, கேகே, எல்எல் மற்றும் எம்எம் படிவங்கள் உருவாக்குதல்
4. வரிவிதிப்பு மற்றும் வரி மீட்பு
5. வரி திருப்புகைக்கான படிவம் டபிள்யூ சமர்ப்பித்தல்
6. இணைய வழியில் சி மற்றும் எஃப் படிவங்கள் போன்ற சட்டப்பூர்வமான படிவங்களை உருவாக்குதல்

## 11.2 மற்ற இணையவழி சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:-

- அவ்வப்பொழுது வெளியிடப்படும் சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகளைப் பார்க்கும் மற்றும் பதிவிறக்கம் செய்யும் வசதி
- வணிகர்கள் கணினியில் உள்நுழைந்து தாம் செலுத்திய வரி விவரம் மற்றும் வணிகர் பற்றிய விவரம் அறியும் வணிகர் பேரேடு வசதி
- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதத்தை இணையவழி மூலம் தெரிந்து கொள்ள தேடுதல் வசதி

- வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) அல்லது பெயர் மூலம் வணிகர்களின் விவரங்களை இணையவழி மூலம் தெரிந்து கொள்ளும் வசதி
- அனைத்து வணிகர்களும் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்தலுடன் கூடிய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பாக, இணைய தளத்தில் தனிப்பட்ட தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 11.3 துறைக்கு வழங்கப்பட்டுள்ள அக இணையதள வசதிகள் (Intranet facilities)

1. வரிவிதிப்பு அலுவலகங்களில் வணிகர்கள் சம்மந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் Tvl.TCS (Tata Consultancy Services) நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பின்தள மென்பொருள் மூலம் வணிக முறையிலான தள பணிப்பாய்வு அடிப்படையில் நிறைவேற்றப் படுகிறது.

2. வணிகர்களுக்கான பதிவுச் சான்றிதழ் மற்றும் பிற பணிகளுக்கு கையொப்பமிட துணை வணிகவரி அலுவலர் முதல் அதற்கும் மேல் பதவியில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் இலக்கமுறை கையொப்பச் சான்றிதழ் (Digital Signature Certificate) வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. முழுவதும் கணினி மூலம் வணிகர்களுக்கு வரிவிதிப்பு ஆணைகளை வழங்குதல்

4. அனைத்து புள்ளியியல் அறிக்கைகளும் இணைய வழியில் உருவாக்கிக் கொள்ளும் வசதி.

5. இணைய வழி மற்றும் வங்கிக் கிளைகளில் செலுத்தப்படும் வரி விவரங்கள் அடிப்படையில் வரி வருவாய் அறிவிக்கைகள் உருவாக்கிக் கொள்ளும் வசதி.

## 11.4 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்துதல்

### 11.4.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்திற்கு வணிகர்கள் மாறுதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக மதிப்புக்கூட்டு வரியின் கீழ் பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்திற்கு மாறவேண்டியிருந்தது. தங்கள் விவரங்களை பதிவு செய்ய வேண்டி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, வணிகர்கள் தங்களின் விவரங்களை எளிதாக பதிவு செய்வதற்கான உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. வணிகர்களுக்கு தங்கள் மதிப்புக்கூட்டு வரி பதிவு விவரங்கள் அடங்கிய JSON (Java Script Object Notation) விவர தொகுப்பு வழங்கப்பட்டு அதனை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டது.

இதுவரை **5,83,018** வணிகர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய தளத்தில் பதிவு செய்துள்ளனர்.

### 11.4.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் புதிய வணிகர்களின் பதிவு

புதிய வரி செலுத்துவோர்களின் பதிவு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய தளம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வரி செலுத்துவோர் பதிவு செய்யவும், பதிவுச் சான்றிதழ்களைப் பெறவும் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே விண்ணப்பிக்கலாம். **31.03.2018** வரை, **3,12,517** வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் GSTIN பதிவு பெற்றுள்ளனர்.

தற்போது **8,95,535** **(31.03.2018** வரை**)** வரிசெலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் பதிவு செய்து, மின்னணு சேவைகள் கிடைக்கப் பெற்றுள்ளனர்.

### 11.4.3 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நமூனாக்கள் சமர்ப்பித்தல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நமூனாக்கள் அனைத்தும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், அவை அனைத்தும் “பயன்பாடு நிரலாக்க இடைமுகம்” (Application Programming Interface) மூலம் வணிகவரித் துறையின் பின்புல தளத்திற்கு கொண்டு வரப்படுகிறது. சராசரியாக மாதமொன்றுக்கு **5.90** இலட்சம் வரி செலுத்துவோர் தங்களது GSTR 3B நமூனாக்களை அதற்கான வரியுடன் சமர்ப்பிக்கிறார்கள்.

### 11.4.4 தகவல்களை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம்

கடைத் தணிக்கையின் போது, வணிகர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து மீளப்பெறும் தகவல்கள், அவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ள வரி ஏய்ப்பினையும் மற்றும் அதிநவீன தவறுகளையும் கண்டுபிடிக்க உதவும் வகையில் இத்துறையில் தகவல்களை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வணிகர்களின் இடத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலைவட்டு (Hard Disk) போன்ற மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து விவரங்கள் ஆய்வு கூடத்தில் மீளப்பெறப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. துறை அலுவலர்களுக்கு தகவல்களை மீளப் பெறுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 12. உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள்

### 12.1 வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பணியாளர்களுக்கு பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதும், வருகை புரியும் வணிகர்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதும் அரசின் கொள்கை ஆகும். எனவே, தனியார் கட்டடங்களில் இயங்கும் வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, பல்வேறு இடங்களில் ரூ.117.34 கோடி மதிப்பீட்டில் 25 வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனில், ரூ.22.03 கோடி மதிப்பீட்டில், 17 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

மீதமுள்ள 8 இடங்களில் ரூ.95.31 கோடி மதிப்பீட்டில், கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் வட சென்னையில் ரூ.25.25 கோடி செலவில் ஒருங்கிணைந்த வணிகவரி கட்டட கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. கிருஷ்ணகிரியில் ரூ.1.41 கோடி செலவில் வணிகவரி அலுவலக கட்டுமானப் பணிகள் தற்போது முடிவு பெற்றுள்ளது.

## 12.2 கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

ரூ.5.20 கோடி செலவில், வணிகவரி அலுவலகங்கள் செயல்படும் அரசுக் கட்டடங்களை பொதுப்பணித்துறை மூலம் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், அலுவலகங்களுக்கு தேவையான தளவாடங்களை டான்சி நிறுவனம் மூலம் பெறுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்பொழுது பணிகள் அனைத்தும் முடிவுபெற்று, அலுவலகங்களில் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, 2017–2018–ஆம் ஆண்டு 10 வணிக வரி அலுவலகக் கட்டடங்களில் ரூ.129.07 இலட்சம் மதிப்பீட்டில் CCTV கேமராக்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 13. நிர்வாக அமைப்பை மறுசீரமைத்தல்

2017–ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய மற்றும் மாநில வரி செலுத்துவோரின் அடிப்படையிலும் பிராந்திய மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலும், இத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பு மறுசீரமைக்கப்படும்.

## 14. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித் துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ், பொது மக்கள் மற்றும் வணிகப் பெருமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து,

உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் உரிய தகவல்களை அளித்து வருகிறது. கடந்த **2017**–ஆம் ஆண்டில் **1147** மனுக்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டன. அவற்றில் **1124** மனுக்களுக்கு தகவல்கள் அளிக்கப்பட்டன. அதன்வாயிலாக ரூ.**13,047/–** பெறப்பட்டுள்ளது.

**கே.சி. வீரமணி**
வணிகவரித்துறை அமைச்சர்